**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**<u>ஊடக அறிக்கை</u>**

## உத்தரப் பிரதேசத்தில் உள்ள குஷிநகர் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிப்பதற்கு மத்திய அமைச்சரவை அனுமதி

உத்திரப்பிரதேசத்தில் உள்ள குஷிநகர் விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக அறிவிப்பதற்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

சிராவஸ்தி, கபிலவஸ்து, லும்பினி போன்ற பௌத்த பண்பாட்டு தலங்களின் அருகே (குஷிநகரும் பௌத்த பண்பாட்டு தலம் என்பது குறிப்பிடத்தக்க விடயம் ) குஷிநகர் விமான நிலையம் அமைந்திருப்பதால், இதனை சர்வதேச விமான நிலையமாக அறிவித்திருப்பது, விமான பயணிகளுக்கு பெரிதும் பயனளிப்பதுடன் , இந்தப் பிராந்தியத்தின் உள்நாட்டு /சர்வதேச சுற்றுலா மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும்.

கோரக்பூர் கிழக்கிலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உத்தர பிரதேசத்தின் வட- கிழக்கு பகுதியில் குஷிநகர் அமைந்துள்ளதுடன் மிகவும் முக்கியமான பௌத்த யாத்திரை மையங்களிலும் ஒன்றாக அது அமைந்துள்ளது.

****

கொழும்பு

14 ஜூலை 2020